செய்தி வெளியீடு எண்—319 நாள்—14.9.2006

# தமிழக அரசிற்கும் அமெரிக்க நாட்டிலுள்ள தி/ள். டெல் நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் 14.09.2006

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில்

———

தமிழ்நாட்டில் அமெரிக்காவைச் சேர்ந்த டெல் நிறுவனத்தினர் கணினிகள் உற்பத்தி மற்றும் கோர்த்தல் தொழிற்சாலையைத் தொடங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மற்றும் மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் திரு தயாநிதி மாறன் ஆகியோர் முன்னிலையில் தமிழக அரசிற்கும் தி/ள் டெல் (அமெரிக்கா) நிறுவனத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (14.09.2006) சென்னை தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது.

**2.** டெல் கம்யூட்டர் நிறுவனம் கணினி மற்றும் கணினி சார்ந்த பொருட்களை உபயோகிப்பாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்வதில் உலகிலேயே முதலிடத்தில் இருக்கும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் நெட்வொர்க் சர்வர்கள், பிரிண்டர்கள், டிஜிட்டல் இசைக்கருவிகள், புரொஜக்டர்கள், லேப்டாப்கள் போன்ற பல்வேறு வகையான மின்னணுச் சாதனங்களையும் உற்பத்தி செய்து உபயோகிப்பாளர்களுக்கு நேரடியாக

விற்பனை செய்து வருகிறது. உபயோகிப்பாளர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு உகந்த வகையில் அனைத்து வகை கணினிகளையும் உற்பத்தி செய்வதில் டெல் நிறுவனம் ஒரு உலக முன்னணி நிறுவனமாகும். கடந்த 4 காலாண்டுகளில் டெல் நிறுவனத்தின் மொத்த விற்றுமுதல் 57.4 பில்லியன் அமெரிக்கா டாலர்களாகும். தற்போது உலகளவில் இந் நிறுவனத்தில் 75,100 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இது “பார்ச்சூன் 500” நிறுவனங்களில் 25–வது இடத்தில் உள்ளது. உலக கணினிச் சந்தையில் 20% அளவிற்கு டெல் நிறுவனத்தின் வசம் உள்ளது.

3. டெல் நிறுவனத்தினர் தனது புதிய உற்பத்தித் திட்டத்தை திருப்பெரும்புதூர் சிப்காட் தொழில் பூங்காவிலுள்ள உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 280 கோடி மூலதனத்தில் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டம் டெல் நிறுவனத்திற்கு துணைப் பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் வழங்கும் மிகப் பெரிய விற்பனையாளர்களை திருப்பெரும்புதூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தங்கள் தொழிற்சாலைகளை அமைக்க ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 1100 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும் உதிரி பாக சக உற்பத்தியாளர்கள் மற்றும் மறைமுகமாகவும் 4000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பாக்கப்படுகிறது.

4. திருப்பெரும்புதூரிலுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம் மின்னணு வன்பொருள் உற்பத்தித் துறையில் தற்போது ஒரு சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. உலகளாவிய மின்னணு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் உற்பத்தி வரைபடத்தில் சென்னை வகித்து வரும் இடத்திற்கு டெல் நிறுவனம் தொடங்கும் புதிய திட்டம் மேலும் ஊக்கமளிக்கும்.

5. டெல் நிறுவனம் இந்தியாவில் தங்கள் உற்பத்தித் திட்டத்தை தொடங்குவதற்காக பல்வேறு மாநிலங்களில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள மிகச் சிறந்த கட்டமைப்பு வசதி, போக்குவரத்து மற்றும் நல்ல சாலை, விமான, துறைமுக வசதிகள், தரமிக்க மனித வளம் மற்றும் மாநில அரசு காட்டிய முனைப்பான உற்சாகம் ஆகியவையே டெல் நிறுவனம் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுக்கத் தூண்டியது. டெல் நிறுவனத்தின் இப்புதிய தொழிற்சாலை திருப்பெரும்புதூரில் 2007–ஆம் ஆண்டின் நடுவில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்கு டெல் நிறுவனத்தின் வருகை ஒரு பெரிய மைல் கல்லாக அமைவதோடு மட்டுமல்லாமல், மாநிலத்திலுள்ள மின்னணு வன்பொருள் உற்பத்தித் துறையின் வளர்ச்சியில் ஒரு சிறப்பான திருப்புமுனையாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இதனால் தமிழ்நாட்டில் கணினியின் பயன்பாடு அதிகரிக்கும் என்றும் கணினிகள் சாதாரண

மனிதர்களும் வாங்கத் தகுந்த விலையில் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

6. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசின் சார்பில் தொழில் துறைச் செயலர் திரு சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப. அவர்களாலும் டெல் இந்தியா நிறுவனத்தின் சார்பில் அதன் துணைத் தலைவர் மற்றும் பொது மேலாளர் திரு ராஜன் அனந்தன் அவர்களாலும் இன்று கையெழுத்திடப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் சிறப்பு நிகழ்ச்சியில், தலைமைச்செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, தகவல் தொழில்நுட்பத் துறை செயலர் திரு.சி.சந்திரமௌலி, டெல் ஆசியா நிறுவனத்தின் விற்பனைப் பிரிவின் துணைத் தலைவர் திரு பால் ஹென்றி பெராண்ட் மற்றும் டெல் ஆசியா பசிபிக் மலேசியா பிரிவின் உற்பத்தி மற்றும் செயல்பாடுகள் துறை துணைத் தலைவர் திரு சைமன் வாங் மற்றும் உலகளாவிய வசதிகள் துறை துணைத் தலைவர் திரு கிப் தாம்ஸன் போன்ற மூத்த அதிகாரிகளும் பங்கேற்றனர்.

* * * * * * * * * *

வெளியீடு—இயக்குநர்
செய்தி மக்கள் தொடர்புத்துறை
தலைமைச் செயலகம்
சென்னை—9.